# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | :CC No.36/2026 | Date | : 05.03.2026 |
| Deposition of Witness for | :அ.சா.1 | Taluk | : |
| Name | :திரு.சுரேஷ் | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், தேவூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2025 ம் தேதி, மதியம் சுமார் 03.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார் என்பவருடன் நானும், முதல்நிலை காவலர் திரு.மயில்சாமி ஆகியோரும் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக, தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கத்தேரி ஏரிக்கரை அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் மஞ்சள் பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் வேல்முருகன், த/பெ.சுப்ரமணி, வட்டமலைக்காடு, தட்டான்குட்டை கிராமம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை

கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 03.45 மணிக்கு கைது செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Old Chef Brandy - 04 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினார்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், முதல்நிலை காவலர் திரு.மயில்சாமி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைது செய்த எதிரியை தடயங்களுடன் மாலை சுமார் 04.00 மணிக்கு நிலையம் அழைத்து வந்து காவல் உதவி ஆய்வாளர், எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.190/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

1) கடந்த 12.07.2025 ம் தேதி, எதிரியை தவிர, வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் யார் யார் தணிக்கை சென்றோம் என்றால் நானும், காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், முதல்நிலை காவலர் ஆகியோர் சென்றோம். கத்தேரி பிரிவு - தேவூர் செல்லும் சாலையில் உள்ள ஏரிக்கரைக்கும் எவ்வளவு தூரம் என்றால் கத்தேரி கனரா

வங்கியில் இருந்து சம்பவ இடம் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு மாலை சுமார் 03.00 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து தேவூர் சுமார் 6 கி.மீ இருக்கும்என்றால் 6-8 கி.மீ இருக்கும்.

2) சம்பவ இடத்தில் இருந்து, குமாரபாளையம் 3-4 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். எதிரியை பிடித்தபோது அவரிடம் 4 மதுபாட்டில்கள் இருந்தது என்றால் சரிதான். எதிர் வைத்திருந்தார் என்றால் மஞ்சள் பையில் வைத்திருந்தார். எதிரியை பிடித்தபோது அருகில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து பணம் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி மதுபானத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிமீது வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Suresh

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC.36/2026 | Date | : 05.03.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.2** | Taluk | : |
| Name | : **திரு.அருண்குமார்** | Calling | : |
| Father/Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 05.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.07.2025 ம் தேதி, மதியம் சுமார் 15.30 மணிக்கு நானும், தலைமை காவலர் திரு.சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மயில்சாமி ஆகியோர்களுடன் மதுவிலக்கு மற்றும் குற்ற தடுப்பு ரோந்து அலுவலாக தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, கத்தேரி ஏரிக்கரை அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு கையில் மஞ்சள் பையுடன் சந்தேகப்படும்படியாக நின்றுகொண்டிருந்த நபரை விசாரித்தபோது, அவர் தனது பெயர் வேல்முருகன், த/பெ.சுப்ரமணி, வட்டமலைக்காடு, தட்டான்குட்டை கிராமம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்று கூறினார். மேலும் அவரை விசாரிக்க அவர் அரசு அனுமதியின்றி, உரிமமின்றி அரசு மதுபாட்டில்களை வாங்கிவந்து அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை

கைதுக்கான காரணம் கூறி மாலை சுமார் 03.45 மணிக்கு கைது செய்தும், அவர் ஆஜர் செய்த சுமார் 180ml அளவுகொண்ட Old Chef Brandy - 04 மதுபாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த தலைமை காவலர் திரு.சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மயில்சாமி ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன்.

2) மேற்படி கைப்பற்றுதல் மகசரில் தலைமை காவலர் திரு.சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மயில்சாமி ஆகியோர்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், கைது செய்த எதிரியை தடயங்களுடன் மாலை சுமார் 04.30 மணிக்கு நிலையம் அழைத்து வந்து எதிரியின் மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.190/2025, சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

3) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்-95 ன் மூலம் காவல் உதவி ஆய்வாளர் திரு.விஜயராகவன், அவர்கள் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். (**படிவம்-95 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், எதிரியின் மீது சட்டப்பிரிவு 4(1)(C) of TNP(A) ACT -ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை -</u>**

1) கடந்த 12.07.2025ம் தேதி, எதிரியை தவிர, வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நாங்கள் யார் யார் தணிக்கை சென்றோம் என்றால் நானும், தலைமை காவலர் திரு-சுரேஷ் மற்றும் முதல்நிலை காவலர் மயில்சாமி ஆகியோர் சென்றோம். கத்தேரி பிரிவு - தேவூர் செல்லும் சாலையில் உள்ள ஏரிக்கரைக்கும் எவ்வளவு தூரம் என்றால் கத்தேரி கனரா வங்கியில் இருந்து சம்பவ இடம் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்திற்கு மாலை சுமார் 03.00 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து தேவூர் சுமார் 6 கி.மீ இருக்கும்என்றால் 6-8 கி.மீ இருக்கும்.

2) சம்பவ இடத்தில் இருந்து, குமாரபாளையம் 3-4 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். எதிரியை பிடித்தபோது அவரிடம் 4 மதுபாட்டில்கள் இருந்தது என்றால் சரிதான். எதிர் வைத்திருந்தார் என்றால் மஞ்சள் பையில் வைத்திருந்தார். எதிரியை பிடித்தபோது அருகில் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் இல்லை. அருகில் இருந்த நபர்களை யாரையும் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சாட்சியம் அளிக்க முன்வராததால் சேர்க்கவில்லை. எதிரியிடம் இருந்து கைப்பற்றிய மஞ்சள் பையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான்.

3) எதிரிமீது இதற்கு முன்பு வழக்கு பதிவு செய்துள்ளோமா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து பணம் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி மதுபானத்தை விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடமே செல்லவில்லை என்றும், நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது புள்ளிவிவர கணக்கிற்காக வழக்கு பதிவு செய்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Arunkumar